9 &10 செப்டம்பர் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH ஆண்டின் பொதுக்காலம் 23 ஆம் ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

**மாதாந்திர கருப்பொருள்:**
திருஅவையும் விளிம்பு நிலையில் வாழும் மக்களும்

**மாதாந்திர நிகழ்வு:**
உலக குடியேற்றவா ிகள் மற்றும் அகதிகள் தினம்

# கெனிங்காவ் மறை மாவட்டம் ஆயர்மாமன்றத்திற்கு முன் தொகுக்கப்பட்ட அறிக்கை



இந்த ஆயர்மாமன்றத்தின் எண்ணம் “கடவுளின் மக்கள் ஒன்றாகப் பயணம் செய்கிறார்கள்” என்பதை அனுபவிக்கும் வகையில் இந்த மறைமாவட்டம் 1993 மே 3 ஆம் தேதி நிறுவப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒன்றுகூட வேண்டுமென்ற திட்டத்தில் இன்று வரை 11 முறை நடைபெற்றுள்ளது. **கூட்டம் அல்லது மாநாடு புக்காட் மறைமாவட்டத்தில் அனைத்து நிலைகளையும் பிரதிநிதித்து வந்தவர்களோடு இணைந்து கூட்டாக மதிப்பாய்வு செ ய்யப்பட்டு, மறை மாவட்டத்தின் பயணத்திற்காக மறுவரையறை செய்யப்படுகிறது.**

ஆயர்மாமன்ற செயல்முறை மீண்டும் மீண்டும் மொழிபெயர்க்கப்பட்டு, “ஆழமாகச் செல்ல”(லூக்கா 5;4) புதிய கண்டுபிடிப்புகளைச் செயல்படுத்தவும், சமூகத்தைச் சென்றடைந்து அவர்களின் குரலை உண்மையாகக் கேட்கவும், செயல்பட்டது. தனிப்பட்ட சமூக கொண்டாட்டங்களைவிட, பொதுவான சமூக கொண்டாட்டங்கள்,




தூதுரைப்பணி ஆகியவற்றின் மூலம் சமூகமாக உணரவும், ஒன்றுசேர்க்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டன.

கடவுளின் உடனிருப்பு, தூய ஆவியாரின் உறுதியான அடையாளத்தினால் வழிநடத்தவும், உடன் நடக்கவும், இதன்வழியாகப் புதியவழிகளை திறக்கிறது, திருஅவையாக அவர்களின் நம்பிக்கையை ஆழப்படுத்துவதை அவர்கள் உணர்ந்தனர். திறன்வாய்ந்த சிந்தனைகள் இதற்கு ஆதாரமாக விளங்கின. பலவீனங்களைக் களையவும், ஏற்றுக்கொள்ளவும் அங்கீகரிக்கவும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன. தரம்வாய்ந்த மறையுரைகளை விரும்பினார்கள்.

திருஅவையின் அனைத்து நிலைகளிலும் விழிப்புணர்வு தனிப்பட்ட வகையிலும், சமூக அளவிலும் இருந்தது. திருஅவையின் தூரநோக்கு மற்றும் தூதுரைப்பணி, சுற்றுச்சூழல், பணிக்குழுக்கள், இறைஅழைத்தல், பங்கேற்பு இன்னும் அதிகரித்தது. “குணமளித்தலையும்” “ஒருங்கிணைத்தலையும்” அனுபவித்தனர். நம்பிக்கையின்மையிலிருந்து நம்பிக்கையும், நிச்சயமற்ற தன்மையிலிருந்து திருஅவையாக நம்பிக்கைக்கும் நகர்கிறது. திருஅவைக்கு மக்கள் எதிர்நோக்கோடும், நன்றியுணர்வோடும், கடவுளின் வழிகளுக்கு நம்பிக்கையோடும் பதிலளிக்கின்றனர்.

மறைமாவட்டத்தின் **கலாச்சார சின்னமாக** அனைத்து சமூகங்களின் கலாச்சாரங்களையும், முன்னோர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்துப் பழக்கவழக்கங்களையும் தழுவி ஒன்றிணைந்தப் பயணத்தில் திறந்த மற்றும் வெளிப்படையாகப் பயணிப்பது. அனைத்து மக்களிடமும் குறிப்பாக குடியேற்றவாசிகளையும் அவர்கள் மத்தியில் இருக்கும் அடிப்படை திருச்சபை சமூகங்களில் ஒன்றிணைப்பது. சேவை செய்வது ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது.

## நிறைவு மற்றும் பரிந்துரைகள்:

- ஆயர்மாமன்ற அனுபவம் மறைமாவட்டத்தில் இன்னும் அதிகரிக்கப்படவேண்டும். ஆயர்மாமன்ற கலாச்சாரம் அனைத்து நிலைகளிலும் பயணிக்கவேண்டும்.
- மேய்ப்புப்பணி திட்டங்கள், அணுகுமுறைகள் மறைக்கல்வி முயற்சிகளில் அனைத்து நிலைகளிலும் குறிப்பாக குழந்தைகள், இளையோர் மற்றும் குடும்பங்கள் என்று முக்கியத்துவம் தந்து மீண்டும் மறு ஆய்வு செய்யப்படவேண்டும்.
- பங்கு நிர்வாகம், மற்றும் பராமரிப்பு - மேய்ப்புப்பணி கொள்கைகள் மறுபரிசீலனை செய்வது, எங்கெங்கு மேம்படுத்தவேண்டுமோ அதைச் செயல்படுத்துவது அவசியம்.
- தரமான சேவையுடன் அனைத்து நிலைகளிலும் உறவுகளை வலுப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

ஆதாரம்:
www.cbcmsb.org

திருத்தம்:
அருள்பணி யூஜின்
இயக்குனர் மாமறைமாவட்ட
மேய்ப்புப்பணி மையம் (API)

மின்னஞ்சல்:
apidirectorkl@gmail.com

INTERNAL CIRCULATION ONLY

BUL 37/2023